35
ஜனவரி 84
50 காசு

# சுட


மாதஇதழ்




www.thamizham.net - Free E Books No TM 14701

For Fast and Friendly Service

Ganesh Overseas Travel & Tours



Your Reliable Tourist Car Operator
For Timeless Service

Aruraj Cabs

217, First Floor, Khaleel Shirazi Estate,
Pantheon Road, Egmore, Madras-600 008.


Cables : GANESHTOUR Tel : 810256

Your Our

www.thamizham.net - Free E Books No TM 14701




www.thamizham.net - Free E Books No TM 14701




www.thamizham.net - Free E Books No TM 14701



## உரிமையை உதறி விடாதீர்கள்

உணவுப்
பொட்டலம்
வழங்கினார்கள்
என்பதற்காக
ஓட்டுக்களை கைம்மாறு
செய்து விடாதீர்கள்!
உங்கள் தேவை
ஒரு நாளுக்கான
உணவுப் பொட்டலங்கள்
மட்டுமல்ல—
வாழ்க்கை
முழுவதுக்குமான
உரிமைகள்

—தமிழ்மகன் (பூமிக்குப் புரிய
வைப்போம். கவிதைத் தொகுப்பி



## சாட்சியங்கள்

கயத்தாறு கிராமத்தில்
கட்டபொம்மனுக்கு
சிலையொன்று போதாதா
கோட்டை கொத்தளங்கள்
தேவை தானா?
கோட்டை கட்டிய செலவில்
கட்டபொம்மன் பெயரில்
சிறிய ஆலை எழுந்திருந்
தால்
கம்பளத்தார் சிலருக்கு
வேலையாவது கிடைத்திருக்
கும்
முடியாட்சி கால விரயங்
களுக்கு
தாஜ்மகால்கள் சாட்சி
மக்களாட்சி கால விரயங்
களுக்கு
கட்டபொம்மன் கோட்டை
கள் சாட்சி!

—மங்களா (கோட்டின் கீழே
புள்ளிகள் கவிதைத் தொகுப்பில்

## போகாதே!

தெரு விளக்கில்
படித்ததால்
முத்துசாமி ஐயர்
நீதிபதியானார்—இதைப்
படித்து விட்டு நீ
தெரு விளக்கிற்குப்
போய் விடாதே...
விளக்கு எரியாதது
மட்டுமல்ல...
சந்தேகக் கேசில்
'கைதி'யாகி விடுவாய்!

—ஏ. பாரதி சங்கர்

## என்னே சுறுசுறுப்பு

என் தோழிக்கு
அவள் முதல் குழந்தை
பெற்ற சமயம்
நான்
அனுப்பி வைத்த வாழ்த்தை
அக்குழந்தையே
தன் 'மனைவி'யோடு
வாசலுக்கு வந்து
வாங்கிக் கொண்டதாம்.
வாழ்க...
அஞ்சல் கந்தி இலாகா!

www.thamizham.net - Free E Books No TM 14701

## வாசகர் குரல்

### நியாய விலைக் கடையில் நியாயம் பிறக்குமா?

பொன்னேரி நகரப் பொது மக்கள் ஆகிய நாங்கள் நியாய விலைக் கடையில் பொருட்களை வாங்கப் படும் இன்னல்கள் கொஞ்ச நஞ்சம் அன்று. அத்யாவசியப் பொருட்களை என்றைக்கு வழங்குவார்கள் என்று தெரியாமல் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை போய் கேட்க வேண்டி உள்ளது. காலை 7 மணிக்கு சென்று வரிசையில் நின்றால் மதியம் ஒரு மணி வரை நிற்க வேண்டியுள்ளது. மறு நாள் சென்றால் கிடைக்காது. மொத்தம் இரு கடைகள் மட்டுமே ஒரு லட்சம் ஜனத்தொகை கொண்ட இந்த ஊருக்கு உள்ளது. ஊரின் மையத்தில் கடை அமைந்து இருந்தாலும் பரவாயில்லை. ஊர் எல்லையில் இருப்பதாலும் சாராயக்கடையை தாண்டிச் செல்ல வேண்டி இருப்பதாலும் அடிக்கடி சென்று வர அச்சம் ஏற்படுகின்றன. அளிக்கும் அளவு குறைவாக இருந்தாலும் பரவாயில்லை. மாத இறுதிக்குள் சென்று கேட்டாலும் பொருள் கிடைக்கும் என்ற உறுதி இருப்பது அவசியம். கடைக் காரர்களைக் கேட்டால் அதிகாரிகளிடம் போய் சொல்லுங்கள் என்கிறார்கள். நமக்கு உள்ள ஒரே உரிமை 'வாக்குரிமை' மட்டும் தானா?

—V. உஷா, 4, அங்க முத்து முதலி தெரு, பொன்னேரி,
செங்கற்பட்டு மாவட்டம்


### வேலை வாய்ப்பு அலுவலகமா?
### வேலை வாங்கும் அலுவலகமா?

காரைக்குடியில் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது திங்கட்கிழமை வேலை வாய்ப்பு அலுவலகத்தினர் மதுரையிலிருந்து இங்கு வந்து புதிய உறுப்பினர்களை பதிவு செய்வது வழக்கம். 21-11-83 அன்று வந்த அலுவலர் பதிவு செய்ய வந்தவர்களிடம் சில தாள்களைக் கொடுத்து இதை அருணாசலா தியேட்டரில் கொடுத்து கையெழுத்து வாங்கி வருபவர்களுக்கு கார்டு பதிவு செய்வேன் என்றார். யாரோ ஓர் அப்பாவி அந்த அரசு இயந்திரத்தின் கட்டளைக்குப் பணிந்து அவ்வேலையினைச் செய்து தனது கார்டினைப் பதிவு செய்து கொண்டார். வேறு யாரேனும் தேவகோட்டை

www.thamizham.net - Free E Books No TM 14701

## பொங்கல் பற்றி சிந்திக்கப்போமா

இந்திய உழவனின் விடிவு நாள் எது? அவனுடைய இறுதி முடிவு நாள் தானா? உழைக்கும் உழவன், உட்கார்ந்தே பிழைக்கும் உத்தியோக வர்க்கத்தின் காலடியில் கிடந்து கெஞ்சும் காலத்திற்கு முடிவே இல்லையா?



இந்த விழிப்புணர்வும், பொறுப்புணர்வும் உழவர்களிடம், உழைப்பாளிகளிடம் என்று வரும்? அந்த உணர்வுகள் அவர்களுக்கு வந்து விடக் கூடாது என்பதற்குத் தானே, சினிமாவும், மதுக் கடையும் ஊருக்கு ஊர் தெருவுக்கு தெரு திறக்கப்படுகின்றன. சினிமா மாய மயக்கத்திலும் மது மயக்கத்திலும் மூழ்கிக் கிடக்கும் உழைப்புக் கூட்டம் விழிக்குமா? விழிக்கும் வரை அவனைத் தொடர்ந்து ஆளப் போவது சினிமாக் காரனும் மதுக் கடைக்காரனும் தான்!

உழவன் விழிப்புற்று கூட்டாக அரசாங்க எந்திரங்களையும், அரசியல் எந்திரங்களையும் கேள்வி கேட்கும் நாள் வரும் வரை இந்த விழா நாட்கள் சினிமாவிற்குப் போவதற்கும், 'மட்டன் கறி' அடித்து விட்டு மதுக்கடையில் நுழைவதற்கும் தான் பயன்படும்.

—அறம்

▶ ரஸ்தாவிலுள்ள I.T.I அலுவலகத்தில் இதே போல் கையெழுத்து வாங்கி வந்தால் உங்களுக்கும் கார்டு தருவேன் என்றார். ஒருவரும் முன் வரவில்லை. வெளியூர்களிலிருந்து வந்து காலையிலிருந்து காத்துக் கிடந்தவர்களிடம் "நேரமாகி விட்டது. அடுத்த மாதம் தான் பதிய முடியும்" என்றார். அவர்கள் எவ்வளவோ கெஞ்சியும் பயனில்லை. ஆனால் அப்போது தான் வந்த இரு பெண்களின் பெயர்களைப் பதிவு செய்து உடனே கார்டும் வழங்கினார். நமது வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பெயரைப் பதிவு செய்ய வேண்டுமெனில் அவர்கள் சொன்ன வேலையைச் செய்ய வேண்டுமா? இல்லை சேலையைக் கட்டி வர வேண்டுமா?

—லியோ நண்பர்கள் குழு, மீனாட்சிபுரம் காரைக்குடி.

www.thamizham.net - Free E Books No TM 14701

# சர்க்கஸ் கலைஞர்கள்


வறுமையால் விரட்டப் பட்டவர்களுக்கு வாழ்வு கொடுப்
பதில் சினிமாத் துறையைப் போல் சர்க்கஸ் துறையும்
ஒன்று. ஆனால் சினிமாத்துறை போல் அல்லாமல் உண்மை
யிலேயே கலைஞர்கள் ஒரே குடும்பமாக வாழும் சர்க்கஸ்
உலகம் பெண்களுக்கு விசேஷ பாதுகாப்பு அளிக்கிறது.
ஒழுக்கத்தைப் பற்றி அதிக அக்கறை கொள்கிறது. பெரும்
பாலான நிர்வாகிகள் முன்பு சர்க்கஸ் கலைஞர்களாக
இருந்து கஷ்டப் பட்டுள்ளதால் கருணையுள்ளத்துடன்
இருக்கின்றனர். குறிப்பிட்ட காலம் வரை பணியாற்றுவதாக
சர்க்கஸ் பெண்கள் ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டிருந்
தாலும் திருமணம் நிச்சயமானால் ஒப்பந்தத்திலிருந்து
விடுதலை கிடைக்கிறது.

குழந்தைப் பருவம், பள்ளிப் பருவம், மங்கைப் பருவங்
களை சர்க்கஸ் உலகிலேயே கழித்து சர்க்கஸ் கலைஞரை
யே மணம் புரிந்து குடும்ப வாழ்வை மேற்கொள்ளும் சில
பெண்கள் ஒவ்வொரு சாகசம் புரிந்து திரும்பும் போதும்
தம் காலைக் கட்டிக் கொள்ளும் தம் குழந்தைகளைப் படிக்க
வைத்து குழந்தைப் பருவத்தை மீண்டும் வாழ ஆசிக்கின்றனர்
சர்க்கஸ் கலைஞரை மணந்து 6 குழந்தைகளுக்குத் தாயான
ரத்னா என்ற சர்க்கஸ் பெண் தமது 5 குழந்தைகளை
கேரளத்தில் படிக்க வைத்திருக்கிறார். தனது குழந்தை
களை விட்டு நாடோடியாகத் திரியும் வாழ்க்கையில் ஏற்
படும் சலிப்பும், துயரமும் குழந்தைகள் படிக்கிறார்களே
என்ற ஆறுதலில் அழிகின்றன.

போலியான குரல், தோற்றம் இவற்றுடன் நடிப்பத
ுள் தயாரிப்பாளர், டைரக்டர்களை ஆட்டி வைத்து அலட்
கொள்ளும் புதுமுக நடிகைகளைப் பற்றி வண்ணப்பட
களுடன் பக்கம் பக்கமாக எழுதும் நமது தமிழ் மசால
பத்திரிகைகள், தமது அபார சாதனையைப் பற்றி பெரு
யடையக் கூடத் தெரியாத, தமது சுகம், உரிமைக
சண்டல் இவை பற்றி சிந்திக்கத் தெரியாத இந்த சர்க்க
பெண்களைப் பற்றி எழுத முன் வருவதில்லை. அரைகு

www.thamizham.net - Free E Books No TM 14701

ஆடையுடன் ஆபாசத்தைப் பரப்பும் நடிகைகளைப் பற்றி கிசுகிசுத்து அவர்களுக்கு மக்களிடையே செல்வாக்கை ஏற்படுத்தும் இப்பத்திரிகைகள் குறைந்த ஆடை உடுத்தியும் தமது உண்மையான கலைத்திறனால் ஆபாசத்தை மங்க வைக்கும் சர்க்கஸ் பெண்களை மக்கள் மனதில் நிறுத்த முயல்வதில்லை.



உண்ண உணவும், தம் வீட்டாருக்கு அனுப்ப பணமும் தான் இககலைஞர்களது தலையாயத் தேவை. அவ்வப்போது கடைத் தெருவுக்குப் போவது, அல்லது ஒரு திரைப்படம் பார்ப்பதே இவர்களுக்கு போதுமான உற்சாகத்தை அளிக்கிறது. இவர்களது பெரிய அச்சமே காலத்திற்கு முந்திய வேலை ஓய்வு தான். 30, 35 வயதிற்குப் பிறகு உடல் தளர்வது இவர்களது வாழ்வில் இருளை, வறுமையை, சாகச வாழ்வில் ஏற்பட்ட விபத்துக்களின் வடுக்களை புதுப்பிக்கிறது. சிறிய சர்க்கஸ்களில் உழைக்கும் கலைஞர்களது உயிர் இன்னும் கூட இன்ஷீர் செய்யப் படவில்லை.


சர்க்கஸை கலை, விளையாட்டு அம்சங்களில் ஒன்றாக் கருதி சர்க்கஸ் கம்பெனிகளுக்கு எல்லா வசதிகளும் செய்து தர வேண்டும் என்று பிரதமர் இந்திரா காந்தி எல்லா மாநிலங்களுக்கும் கடிதம் எழுதியிருக்கிறாராம். ஆனால் நடைமுறையில் எல்லாமே நீர் மேல் எழுதிய எழுத்துக்கள் தான். தமாஷா வரி விலக்கத்தைத் தவிர சர்க்கஸ் கம்பெனிகளும் ஏனைய வணிக ரீதியான தொழில்களைப் போலவே தான் அரசால் பாவிக்கப் படுகின்றன. சில சர்க்கஸ் கம்பெனிகள் 67 நாட்களுக்கு தண்ணீர் வரியாக மட்டும் ரூ 60,000 செலுத்தியிருககின்றன.

முதல் தரமான சர்க்கஸ் ஊழியர்கள் இப்போது தான் யூனியன் ஆரம்பித்துள்ளனர். கேரள அரசு 15 வருடம் சர்க்கஸ் கம்பெனியில் பணியாற்றியவருக்கு ஓய்வு ஊதியம் கொடுக்க ஆரம்பித்துள்ளது. சர்க்கஸ் பெடரேஷன் என்ற

www.thamizham.net - Free E-Books- No TM 14701

போது தேர்தல்களுக்காகக் காத்திருக்க முடியாது. அப்போது தான் போராட்டங்கள் அவசியமாகின்றன.

விலைவாசிப் போராட்டங்கள் உயிருள்ளவை தான். ஆனால் கட்சிகளுக்கு மட்டுமே அவை பலனளிக்கும். நாட்டுக்கல்ல.



விலைவாசிப் போராட்டங்களில் ஈடுபட்டு சுதந்திரத்தை சோறு போட வைக்கும் அட்சய பாத்திரமாக்குவது ஒரு புறம் இருக்கட்டும்.

மக்களின் வரிப்பணம் அநியாயமாகக் குருதியைக் குடிக்கும் குண்டாந்தடிகளாக விழாமலும், நமது பெண்களின் மானத்தைக் காக்கவுமாவது இந்த சுதந்திரம் முதலில் வழி செய்யட்டும்.

மற்றபடி எவ்வளவு ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் தொண்டர்கள் கட்சிப் போராட்டங்களில் ஈடுபட்டாலும் அவர்கள் எல்லாம் போலிப் போராட்டங்களுக்கு ஆளான பலி ஆடுகளே.

கைராட்டை பொருளாதாரக் கொள்கையைக் கைவிட்ட நூறு காந்தியடிகளும், வன்முறை இல்லாமல் இந்நாட்டுக்கு தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் ஆயிரம் பகத்சிங்கு களும் இந்தியாவுக்கு அவசரமாகத் தேவை.

அவர்களே உண்மையான போராட்டங்களைத் தலைமை யேற்று நடத்த முடியும். (தொடரும்)

▶ அமைப்பு ஒன்று 23 அங்கத்தினர்களுடன் செயலபட்டு வருகின்றது. இது டெல்லியருகே ஒரு சர்க்கஸ் பயிற்சி நிலையம் அமைக்க சிறிது இடம் கொடுத்து உதவும் படி மத்திய அரசை கேட்டு வருகிறது. சர்க்கஸ் கலைஞர்களுக்கு ஓய்வு ஊதியம், சாகசம் புரியும் போது இறக்க நேர்ந்தால் இவர்களது குடும்பத்திற்கு நிதியுதவி அளிக்க மத்திய அரசு முன் வர வேண்டும்.

—ரேவதி

www.thamizham.net - Free E Books No TM 14701

# இந்தியா
## நேற்று - இன்று - நாளை 4

**போராட்டங்கள் :—** போராட்டங்களைத் தவிர்க்க முடியாத காலக் கட்டத்தில் இந்தியா வாழ்கிறது. நகரங்கள் எங்கும் போராட்டங்கள் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. ஆனால் அவை உயிரின்றி வியர்த்தமாகின்றன.

போராட்டம் சிறியதாகவோ பெரியதாகவோ இருக்கலாம். பிசுபிசுத்தும் போகலாம். ஆனால் போராடுபவர்களிடம் சமுதாயத்தைப் பற்றிய கவலை உணர்வு இருக்க வேண்டும். விடுதலைப் போரில் இக்கவலை உணர்வும் புரிந்துணர்வும் போராட்டங்களில் வெளிப்பட்டன.

பாட்டாளிக்ளின் பாசறைகளான தொழிற் சங்கங்கள் நடத்தும் போராட்டங்களின் எல்லைகளும் காரணங்களும் மிகக் குறுகியவை. இவற்றின் நோக்கங்கள் தொழிலாளர்களை அவர்களுக்குள்ளேயே தனித்து ஒதுக்கி வைக்கிறது. ஊதிய உயர்வுக்காகவும், உரிமைகளுக்காகவும் அவர்கள் போராடுவது தவறில்லை. ஆனால் அந்த ஒன்றுக்கு மட்டுமே அவர்களைத் தகுதியாக்குவது தான் இழிவானது.

வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்காக போராடுபவர்கள் வேலை இல்லாதவர்களைப் பற்றி சிந்திப்பதில்லை. சமுதாயக் குமுறல்களை இவர்கள் கேட்காத போது இவர்களின் கூப்பாடுகளைக் கேட்க முடியாதபடி சமுதாயம் செவிடாயிருக்கிறது. 75% சொந்தப் பிரச்சனைகளுக்காகப் போராடினால் 25% சமுதாயத்திற்காகப் போராட வேண்டும். உயிரற்ற போராட்டங்கள் சவக்களை தட்டிய ஊர்வலங்களில் முடிகின்றன.

ஆளுங்கட்சிகளின் பொருளாதாரக் கொள்கைகள், நிர்வாக முறைகள் சரியில்லை என்றால் அவற்றை விமர்சித்து வெளியேற்ற தேர்தல்கள் காத்துள்ளன. போராட்டங்கள் தேவையில்லை. மேடைகளும் பிரச்சார கருவிகளும் தான் முடுக்கி விடப்பட வேண்டும்.

ஆனால் மனிதாபிமான பிரச்சனைகள் மீறப் படுகின்ற

www.thamizham.net - Free E Books No TM 14701

# காது நன்கு கேட்க வேண்டுமா?

காது மந்தத்தன்மை மிகவும் மோசமாகும் வரை காத்திருக்காதீர்கள். நாங்கள் உதவி செய்ய காத்திருக்கிறோம்.

**இயர் எய்ட்ஸ்**

4, வடக்கு உஸ்மான் ரோடு,
தி. நகர், சென்னை-600 017.

தமிழ் மூலம் ஆங்கிலம் பயில பி. சி. கணேசன் எழுதியவை.
ஆங்கில ஆசான்—3.50
ஆங்கில சொற்களஞ்சியம்—4.00

சாரதா திருவேதி எழுதியது
நீங்களும் யோகாசனம் பயிலலாம்—5.00
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
<u>சுபோதயா பப்ளிகேஷன்ஸ்</u>
மாதவி பதிப்பகம்
192, இராயப்பேட்டை நெடுஞ்சாலை
மயிலாப்பூர், சென்னை-4.

# ஆஸ்துமாதானே!

இனி கவலை வேண்டாம்! முப்பது வருட கால நோயாளிகளுங்கூட, மூன்றே மாதங்களில் வியக்கத்தக்க வகையில் குணமடைய நேரிலும் கடிதம் மூலமும் ஆலோசனை பெறலாம்.

முகவரி : சித்தஞானி ஞானோதய வைத்தியர்,
Dr. C. K மாணிக்கவாசகம்,
செலந்தம்பள்ளி (PO) திருப்பத்தூர் (TK)-635653 (N.A.Dt)

குறிப்பு : மனிதர்கள் முறைப்படி உண்ண வேண்டிய காரம், கசப்பு, இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உப்பு, ஆகிய அறுசுவை உணவில் போதுமான அளவு "கசப்புக்குரிய" காய்கறி கீரை வகைகளை கலந்துண்பதே இல்லை. இதுவே மனிதர்களின் பெரும்பான்மையான நோய், வலி, வியாதிகளுக்கு மூலகாரணமாகின்றன. ஒவ்வொரு வேளை உணவிலும் தவறாமல் உப்புச் சுவையை கலந்துண்கிறோம். எந்த வேளை உணவிலாவது கசப்பு ருசியை உண்கின்றோமா? சிந்தியுங்கள்.


www.thamizham.net - Free E Books No TM 14701

# ஸீசன் பஞ்சாங்கங்கள்

*பெரிய பத்திரிகைகள் அதிக விலையில் தீபாவளி மற்றும் பொங்கல் மலர்கள் வெளியிடுகின்றன. அவை பற்றி உங்கள் கருத்து என்ன?*

**வல்லிக்கண்ணன் :**

பத்து வருஷங்களுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட மலர்களுக்கும் இந்த வருஷத்து மலருக்கும் அதிக வித்தியாசம் எதுவும் இல்லை. அதாவது, வளர்ச்சி இல்லை. அட்டைப்படம், உள்பக்க விஷயங்கள், படங்கள் எல்லாம் அனைத்து வருஷங்களிலும் ஒரே மாதிரித்தான் இருக்கின்றன. தீபாவளி, பொங்கல் மலர்கள் என்பதைவிட இவைகளை "ஸிசன் பஞ்சாங்கங்கள்" என்று குறிப்பிடலாம். பஞ்சாங்கங்கள் எத்தனை வருஷங்களானாலும் மாறுதல் இல்லாமல் ஒரே ஃபார்முலாப்படி இன்னின்ன அம்சங்கள் இப்படி இப்படி இருக்க வேண்டும் என்ற முறையில் உருவாக்கப்படுகின்றன. அதே போல் தான் தமிழ் பத்திரிகைக் காரர்களும் மலர் தயாரிக்கிறார்கள். புதுமை, கலை இலக்கிய வளர்ச்சி போன்ற எதுவும் புகுந்துவிடாதபடி கவனித்துக் கொள்கிறார்கள். விளம்பரங்கள் அதிகமாகவே கிடைக்கின்றன அதுக்காகத்தானே அவர்கள் மலர் தயாரிக்கிறார்கள்

சந்திப்பு : சீ. இரகுராமன்

☐ *உலக நாடுகள் அரை நாளில் செய்யும் இராணுவச் செலவில், உலகம் முழுவதும் மலேரியாவை ஒழித்து விடலாம்.*

www.thamizham.net - Free E Books No TM 14701

# சிறுகதை தரிசனங்கள்

"உம் உம் சீக்கிரம்... நேரம் ஆச்சு. சீக்கிரமா போனாத்தான் டிக்கெட் கிடைக்கும்" படபடத்தான் பிரசாத். பிரசாத்தின் படபடப்பு தாள மாட்டாமல் வேக வேகமாய்ச் செருப்பைத் தைத்தான் அவன்! வேகத்தில் முன்புறம் குத்தி பின்புறம் நூலை வாங்கும் போது சுட்டு விரலுக்குள் நறுக்கென்று பாய்ந்து விட்டது குத்தூசி.

ரத்தம் பீறிட்டு செருப்பை நனைத்தது!

"ஐயய்யே... என்னைய்யா நீ, செருப்பும் தைக்கத் தெரியலை. ஒரு மண்ணும் தெரியலை. கையை குத்திகிட்டு தடுமார்றியே தெச்சது போதும் செருப்பை குடுய்யா..."

—நாலணாவை விட்டெறிந்தான் பிரசாத். அவன் அதை எடுத்தபடியே, "ஐயா, பார்த்து போட்டுக் கொடுங்க" என்ற போது பிரசாத்திற்கு கீறி விட்ட மாதிரி கோபம் வந்தது.

"நீ செஞ்ச வேலைக்கு இன்னும் வேணுமா? இதுவே ஜாஸ்தி. காசு என்ன எங்க வீட்டு தோட்டத்துலையா முளைக்குது? பிச்சைக்காரன் மாதிரி நடந்துக்கிறீங்களே..."

—பேசிவிட்டு வேகமாக நடந்தான். கால்கள் குறிப்பிட்ட சினிமா தியேட்டரை அடைந்த போது கூட்டம் கவுண்டரில் முட்டி மோதிக் கொண்டிருந்தது.

பிரசாத் ஆர்வம் அலைமோத கவுண்டருக்குள் புகுந்தான். நெக்கித் தள்ளிய கூட்டத்தின் ஊடே ஒரு துரும்பைப் போல் சிக்கி விழி பிதுங்க கவுண்டருக்குள் அணு அணுவாய் நகர்ர்ர்ந்து...நகர்ர்ர்ந்து...

சட்டென்று கூட்டம் காற்றுப்போன பலூனைப் போல் நெருக்கம் தளர்ந்து பின் வாங்கியது.

"டிக்கட் தீர்ந்துடிச்சாம்... தீ ர் ந் து டி ச் சா ம்..." பிரசாத்தின் முகம் ஏமாற்றத்தில் சுருங்கியது. கவுண்டருக்கு வெளியே வந்தான்.

"ரெண்டு ரூவா டிக்கட் நாலு ரூவா, ரெண்டு ரூவா டிக்கட் நாலு ரூவா", பிளாக்கில் டிக்கெட் விற்பவன் சுவர்க்கோழி மாதிரி பிரசாத்தின் காதோரம் வந்து முனகி முனகி அகன்றான்.

→

www.thamizham.net - Free E Books No TM 14701

## அட! குடியரசு தலைவரா!

ஒரு வெளி நாட்டுச் செய்தியாளர் சுவிஸ் நாட்டுக்கு வந்தார். தலைநகரில் பலரோடு உரையாடினார். ஒவ்வொருவரிடமும் அந்நாட்டுக் குடியரசுத் தலைவரின் பெயரைக் கேட்டார். எவராலும் சொல்ல முடியவில்லை.' இறுதியாக ஒரு நகரப் பேருந்து நிற்குமிடத்தில் பேருந்திற்காகக் காத்திருக்கும் ஒருவரிடத்தில் "உங்கள் நாட்டுக் குடியரசுத் தலைவரின் பெயர் என்ன?" என்று கேட்டார். அதற்கு அவர் சிரித்துக் கொண்டே விடையளித்தாராம். செய்தியாளருக்கோ வியப்பாய் போய் விட்டதாம், "பலரும் விடை கூற முடியாது போன போது நீங்கள் மட்டும் எப்படிச் சொன்னீர்கள்" எனக் கேட்டார். "நான் சரியாகச் சொல்லி விட்டேன் ஏனென்றால் நான்தான் அந்தக் குடியரசுத் தலைவர்" என்று கூறிக்கொண்டே பேருந்தில் ஏறிச் சென்று விட்டார். செய்தியாளர் சிவிஸ் நாட்டில் குடியரசுத் தலைவர் என்ற பதவிக்கோ, தனிமனிதப் போற்றுதலுக்கோ முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை என்பதை உணர்ந்தார்.

—நன்றி : அணி— கே. சேகர்

நாலு ரூபாயைக் கொடுத்து டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான். உடையெல்லாம் கலைந்து அழுக்காகியிருந்தது. சில இடங்களில் தையல் விட்டிருந்தது. கூட்ட நெரிச்சலில் ஒரு உழைப்பாளி ரத்தம் சிந்தி தைத்திருந்த செருப்பும் கூட நார் நாராய்ப் பிய்ந்திருந்தது.

பிரசாத் அதைப் பார்த்து வேதனைப்பட்ட சமயம் அந்த செருப்பு கேட்காமல் கேட்டது,

"எனக்காக உழைத்தவன் கூலியை கொஞ்சம் அதிகம் கேட்டதற்கு சத்தம் போட்டு பிச்சைக்காரன் மாதிரி என்றாயே... இப்பொழுது நிஜப் பிச்சைக்காரன் யார்?

"இரண்டு ரூபாய் டிக்கெட்டை நாலு ரூபாய்க்கு வாங்க மட்டும் எந்த தோட்டத்தில் காசு முளைத்தது?"

—திரையில் ஓடும் படத்துடன் அவனால் ஒன்ற முடியவில்லை. நிதர்சனமான நிஜங்களின் முன்னால் அவன் தலை குனிந்திருந்தது.

—இந்திரா சௌந்தர்ராஜன்

www.thamizham.net - Free E Books No TM 14701

கசகசா சில தின்பண்டங்களில் ருசிக்காக மட்டும் சேர்க்கப் படுவதில்லை. இது தேகத்திற்கு குளிர்ச்சி தரும் மருத்துவ குணமும் கொண்டது. எச்சரிக்கை :— இதை அதிகம் உண்டால் மயக்கம் வரும்.

**ஓயாது அழும் குழந்தைகளுக்கு :** கசகசாவை மை போல் அரைக்க. குழந்தையின் தொப்புளைச் சுற்றித் தடவுக. அழுகை அடங்கும்.

**ஆண்மை வடிவு மாற :** அரைப்பலம் கசகசாவுடன் ஒரு பிடி வேப்பிலை, ஒரு துண்டு கஸ்தூரி மஞ்சள் இவைகளை சேர்த்து அரைத்துப் பூசி கழுவுக.

**வயிற்றுப் போக்கிற்கு :** நாலு விரற்கடை கசகசாவை எடுத்து அதை வாயில் போட்டு நன்றாக மென்று தின்று கொஞ்சம் தண்ணீர் குடிக்கவும்.

# நமது கசகசா மருத்துவம்

**தேக அரிப்புக்கு :** கசகசா, கருஞ்சீரகம், காக்காய்க் கொல்லி விதை, நீர்வெட்டி முத்துப்பருப்பு இவை தலா கால் பலம், தேங்காய்க் கீற்று ஒன்று, இவற்றை ஒன்றாக, நன்றாக அரைத்துத் தேவையான அளவு தேய்த்துக் குளிக்கவும்.

**சீதபேதிக்கு :** தூய்மையான கசகசாவை லேசாக வறுத்து, அம்மியில் வைத்து மைபோல் தூள் செய்து, கொஞ்சம் பனை வெல்லம் சேர்த்து அரைத்து, கொட்டைப் பாக்களவு காலை, மாலை சாப்பிடவும்.

கசகசாச் செடியின் விதையே நம் உணவிலும், மருந்திலும் பயன்படுத்தும் கசகசா. கசகசாச் செடியின் இளம் காயைக் கீறி அதிலிருந்து வடியும் பாலைக் காற்றில் உலர்த்தி எடுப்பதே 'அபின்' என்ற லாகிரிப் பொருளாகிறது. இதைப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: எஸ். ர. துரைராஜா, வீட்டு வைத்தியம்.

—சித்தன்

[அடுத்து நமது உப்பு மருத்துவம்]

www.thamizham.net - Free E Books No TM 14701

# இப்படியோர் வழிகாட்டி

சென்ற மாதத்தில் ஒரு மாலை நேரம். சென்னை தி. நகரிலுள்ள மிகப் பிரபலமான ஜவுளிக் கடை அது. கடை வாயினுள் நுழைந்த போது, கடை சிப்பந்திக்கும், ஒரு வாடிக்கையாளருக்கும் பலத்த வாக்கு வாதம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. இடையில் நான் சென்று தலை யிட்டு விசாரித்தேன். அந்த வாடிக்கையாளர் 2 நாட்களுக்கு முன் ரு 300க்கு ஒரு புடவை வாங்கி சென்றிருக்கிறார். வீட்டிற்கு எடுத்துச் சென்று துவைத்தவுடன், புடவை சாயம் போய், சல்லடைக் கண்களாகி விட்டது. வாடிக்கையாள ருக்கு மாற்றுப் புடவை அல்லது பணம் திரும்ப வேண்டும். கடைக்காரர் தர மறுக்கிறார். இது நான் விவகாரம். நான் உடன் அந்த வாடிக்கையாள நண்பரை அழைத்துக் கொண்டு முதலாளியை சந்தித்து பேசினேன். முதலாளியோ விற்பனை செய்த பொருள்கள் எக்காரணம் கொண்டும் திரும்பப் பெறப்பட மாட்டாது என்று பில்லில் அச்சிடப் பெற்ற அயோக்கியத் தனமான வாசகத்தை சுட்டிக் காட்டி, பொறுப்பை தட்டிக் கழித்ததோடு "கலாட்டா" செய்தால் போலீஸுக்கு போன் செய்வேன் என்றும் பயமுறுத்தினார். நான் சளைக்கவில்லை. நீங்கள் இப்போது இந்தப் புடவை யை திரும்பப் பெற்றுக் கொள்ளா விட்டால், நான் ஒன்றும் ஆர்பாட்டம் செய்யப் போவதில்லை. உங்கள் கடை வாசலிலேயே நின்று கொள்வேன். வருபவர்களிடமெல்லாம் இந்தக் கடையில் வாங்கிய புடவை இது. இதன் இலட்சணத் தைப் பாருங்கள்... பாருங்கள் என்று எல்லோரிடமும் காண்பிக்கப் போகிறேன் சம்மதமா? என்றேன். பல ஆயிரங் களை இழக்க விரும்பாத முதலாளி சே... சே... இதெல்லாம் என்ன பெரிய விஷயம்! கொடுங்கள், வேறு மாற்றித் தருகிறேன் என்று வழிக்கு வந்தார்.

நம் மக்களிடம் அநீதியும் அக்கிரமங்களும் நடைபெ றும் போது அதைத் தட்டி கேட்கும் எண்ணம், உணர்வு இல் லை. இந்த விஷயத்தில் நம் மககள் விழித்துக் கொண்டு, உடன் செயல் பட முன் வர வேண்டும்.

பேரா. மதி. சீனிவாசன் அவர்களின் சந்திப்பில் சீ. இரகுராமன்

www.thamizham.net - Free E Books No TM 14701

# தாய், சுட்டியை மிரட்டுகிறதா?

தாய் இதழ் 18-12-83, பக்கம் :66இல், கட்டம் கட்டி, கலர் போட்டு இப்படி ஒரு மிரட்டலை, அதன் ஆசிரியர் வெளிட்டிருக்கிறார்.

**சுட்டிக்கு 'குட்டு'த்தான் கூற வேண்டும்!**

சுட்டியின் தாய் மீதான உண்மையல்லாத தரம் தாழ்ந்த முதல் பக்க வாலாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது. திசைமுத்து வருந்துகிறார்.

—ஆசிரியர்

சுட்டி டிசம்பர் 83 இதழில் தாய் பத்திரிகையில் வெளியான துணுக்குகளுக்கு, மதுரை துணுக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் திசைமுத்துவுக்கே ரூ 455வரை வரவேண்டி இருப்பதாகவும், பொதுவாக அந்தப் பத்திரிகை துணுக்குகள் எழுதும் அன்பர்களுக்குப் பணம் அனுப்பவதில்லையென்றும்

**தாய் பற்றி வாசகர் மனக்குறைகளில் சில...**

"...நானும் சுமார் எட்டு மாதங்களுக்கு முன்பு வரை தாயில் துணுக்குகள் எழுதி வந்தேன். துணுக்கு ஒன்றுக்கு ரூ 5/- என்ற விதம் கணக்கிட்டால் கூட ரூ 55 ஆகிறது, என் படைப்புகளுக்குத் தாய் தர வேண்டியது, சிறு கவிதைகள், துணுக்குகள் ஆகியவற்றை தாயிலே எழுதி வந்த நான் "எழுத்தாளர்கள் படைப்புகளுக்கு பாக்கியிருப்பின் அது குறித்து எழுத வேண்டும்" என்று ஒரு முறை விளம்பரம் வந்தபொழுது 'சிறு கதை பாக்கி' என்றே குறிப்பிட்டு இருப்பினும், என்னுடைய பிரசுரமான துணுக்கு, கவிதைகளைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதியும் இன்று வரையும் பதில் இல்லை. எனவே தாயின் 'மாற்றாந்தாய்' நிலையை உணர்ந்து அதற்கு எழுதுவதையே விட்டு விட்டேன்."

—கவிஞர் என். ஜெ. சுகுமாறன், புதுச்சத்திரம்-613105, தஞ்சை மாவட்டம்.

"...அண்ணா அறக்கட்டளையின் அநியாயம் கண்டேன். எனக்குக் கூட இரண்டு மூன்று பிரசுரத்திற்கான பணம்

www.thamizham.net - Free E Books No TM 14701

'உங்களுக்குத் தொல்லை தரவோ, ஒழித்துக் கட்டவோ சில பெரிய சக்திகள் முன் வந்தால் உங்கள் நிலை என்ன? அச்சம் கலந்த பரிவுடன் கேட்டனர் சிலர். எங்கள் பதில் :— அரசும், கட்சிகளும், பத்திரிகைகளும் மக்களிடமிருந்து அந்நியமாகி விட்ட ஒரு காலத்தின் நியாயம் தான் சுட்டியின் தோற்றமும் வளர்ச்சியுமே தவிர, எங்கள் பலம் அல்ல. எனவே சுட்டி தவிர்க்க முடியாதது! சுட்டியை ஒழித்துக் கட்ட இச்சக்திகள் முன் வந்தால், சுட்டியின் சாம்பலிலிருந்து ஒன்றும் ஏராளமான படுசுட்டிகள் புறப்படும்.'
(திருப்பூர் சுட்டி வாசகர் சந்திப்பு பற்றி நண்பர்களே! கடிதத்திலிருந்து: சுட்டி எண் : 10:15-11.81)

சுட்டி வாசகர் ஒருவர் மதுரையிலிருந்து எழுதிய கடிதத்தை வெளியிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

தாய் இதழ் வெளியான அதே தேதியில், திரு. திசை மூத்து தனக்கும் சுட்டியில் வெளியான செய்திக்கும் துளியும் சம்மந்தம் கிடையாதென்றும், தன்னிடம் விளக்கம் கேட்டு இச்செய்தியை வெளியிடாததற்காக வருந்துவதாகவும் சுட்டிக்கு ஓர் அஞ்சலட்டை எழுதியிருக்கிறார். எந்தச் சூழலில் அவர் இப்படியொரு அவசர அஞ்சலட்டையை எழுதினார் என்பது நமக்குத் தெரியாது. அவர் எழுதியது ▷

...பரவில்லை தான். தாய் இதழ் ஆரம்பத்திலிருந்தே இது தான் ...டப்பு. நம் சுட்டியின் முதல் பக்கத்தைப் பார்த்தாவது இனி ...திருந்துகிறார்களா பார்ப்போம்?"
—கே. தீபன். 6, பி.பி. ரோடு. மேலப்பொன்னகரம், மதுரை-10.

"...தங்கள் இதழில் தாய் இதழ் குறித்து பிரசுரித்ததற்கு மிக்க நன்றி. மேலும் சில விளக்கங்கள்; தாய் இதழில் ...ப்பத்திரிகையில் எழுதுபவர்களுக்குச் சன்மானம் தந்து ...விட்டது போல் நடித்திருக்கிறது. உண்மையில் கதை, ...ட்டுரை, துணுக்கு எழுதும் வெளி நபர்களுக்கு அது ...ன்மானமே அளிப்பதில்லை. எனது நண்பர் L. சுடலை ...மூர்த்தி தாயில் எழுதிய துணுக்குகளுக்குச் சன்மானம் ...அனுப்பவில்லை. அவருடைய புனைப் பெயரான ...ா. பாக்கியராஜ் பெயரில் தான் தங்களுக்குக் கடிதம் ...எழுதினார். தாய் உண்மையில் சன்மானம் அனுப்பியிருக்கு...மையாயின் அதற்குரிய தஸ்தாவேஜுகளைச் சமர்பிக்க ...யாரா?"
இரா. மார்சல் முருகன், பொருளாளர் : கலைமாலை இலக்கியவட்டம் ...
6. ...

www.thamizham.net - Free E-Books No TM 14701

உண்மையெனில், அவர் பெயரைத் தவறாக சம்மந்தப்
படுத்தியதற்கு சுட்டி ஆசிரியர் குழு வருந்துகிறது. அவரிடம்
மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறது.

ஆனால் தாய் இதழ் கதை, கட்டுரை, துணுக்குகள்
எழுதும் வெளி நபர்களுக்கு சன்மானம் அனுப்புவதே
இல்லையென்று தொடர்ந்து பல வாசகர்கள் எழுதிய
வண்ணம் இருக்கிறார்களே! சுட்டி எழுதிய செய்தி பொய்
என்றால், தரம் தாழ்ந்த வாலாட்டமென்றால், தங்கள்
படைப்புகளை • துணுக்களை தாயில் வெளியிட்டு பணம்
வராமல் ஏமாற்றப்பட்டு எமக்கு வருந்தி எழுதும் எழுத்தாளர்
களுக்கு சன்மானம் அனுப்பியதற்கு ஆதாரப் பூர்வமாக
சான்று காட்ட முடியுமா? காட்ட முடியா விட்டால் உரிய
ச ன் ம ா ன த் தை அனுப்பி இந்தப் புகார்களுக்கு முற்றுப்
புள்ளி வைப்பதே நியாயமாகும்!

அதை விட்டு விட்டு சுட்டியின் மேல் நடவடிக்கை எடுப்
பதாக மிரட்டுவது—சிறுப்பிள்ளைத் தனமான செயலாகும்.

## நேர்மையான திருடன்

பெங்களூரில் உள்ள அஞ்சலகம் ஒன்றில் ஊழியர்கள்
பணப்பெட்டியில் ரு 49,821ஐ வைத்துப் பூட்டி விட்டு ம
சாப்பிடச்சென்றனர். திரும்பி வந்த போது பெட்டியில்
பணத்திற்குப் பதில் ஒரு கத்தியும், இரும்புக் கம்பியும்
மட்டுமே இருந்தன. உடனே காவல் நிலையத்தில் புகார்
செய்யப்பட்டது. ஆனால் இரு தினங்களில் வேறொரு
அஞ்சல் பெட்டியில் கடிதங்களை சேகரித்துக் கொண்டிருந்த
ஊழியர் ஒருவர் ஒரு பார்சலை அஞ்சலகத்திற்குக் கொண்டு
வந்தார். அதில் ரு 49,471ம் கடிதம் ஒன்றும் இருந்தது.
அக்கடிதத்தில், "ஒரு தொழில் தொடங்குவதற்காகவே
இந்தப் பணத்தை எடுத்தேன். இதனால் நீங்கள் படும்
துன்பத்தைப் பார்த்து பணத்தைத் திருப்பித்தர முடிவு செய்து
விட்டேன். இதிலிருந்து ரு 350 வரை செலவு செய்து
உள்ளேன். இதை வட்டியுடன் திருப்பித் தந்து விடுகிறேன்.
இப்படிக்கு உண்மையுள்ள திருடன்" என்று எழுதப்பட்டு
இருந்தது.

www.thamizham.net - Free E Books No TM 14701

# மசாலா பவன்

இதுவரை முற்போக்கு பத்திரிகைகள் சாதித்தது என்ன?

—R. தங்கமணி, வாகத்தொழு வேலூர்


தெளிவதற்காக குட்டைகளை குழப்பி இருக்கிறார்கள்.



நாடகங்களால் தற்போதைய சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்று நினைக்கிறீர்களா?

—T. ராஜசேகரன், திருச்சி

எப்போதும் முடியும்.



கடவுள் நம்பிக்கை ஒழிந்தால் ஜாதி மறையுமென்று தி.க.வினரும் நிலவுடமைச் சுரண்டல் முறையே சாதியைப் பாதுகாக்கிறது என்று கம்யூனிஸ்டுகளும் கூறுகிறார்களே எது உண்மை? அறிவுமணி, ஊற்றங்கரை

பின்னதே உண்மைக்கு நெருக்கமாக உள்ளது.

மசாலா சினிமாக்களும், மசாலா பத்திரிகைகளும் நல்ல வசூலும் விற்பனையும் ஆவது ஏன்?

—A. செல்வராஜ், சின்னியம பாளையம், கோவை

மணத்தாலும், சுவையாலும் மக்களைக் கவர்ந்து வயிற்றைக் கெடுக்கும் மசாலாப் பண்டங்கள் ஓட்டல்களில் விரைவில் விற்பனையாகி வசூலை அதிகரிப்பதைப் போலத்தான்.

விண்வெளியியல், மருத்துவம் போன்ற அறிவியல் பாடங்களை நம் தாய்மொழி மூலமாகவே போதிக்கலாம் என்ற நிலை, வரும் நூற்றாண்டிலாவது சாத்தியப்படுமா?

—சீ. இரகுராமன், அரும்பாக்கம்

முடியுமா? முடியுமா என்று மலைத்துக் கொண்டிருக்கும் இந்த அவநம்பிக்கை தொடர்ந்தால் எந்த நூற்றாண்டிலும் இது சாத்தியமாகாது.

www.thamizham.net - Free E Books No TM 14701

# ஆபத்தம் தண்ணீர்

இந்தியாவின் நெற்களஞ்சியங்களில் ஒன்று ஆந்திரம். ஆனால் இம்மாநிலத்தில் பாதிக்கு மேற்பட்ட பகுதியில் உள்ள நீர் அதிக அளவு ப்ளுரைடு கொண்டுள்ள நச்சு நீர். 12 மாவட்டங்களில் 171 கிராமங்கள் குடிநீர் பிரச்சனையால் சுடுகாடாகக் காட்சியளிக்கின்றன.

விஷ நீரால் கால்கள் சூம்பி, மூட்டுகள் இறுகி, முதுகு கூன் விழுந்து, பற்கள் தேய்ந்து, குழந்தைகளும் இளைஞர்களும் காலத்திற்கு முன்பே மூப்பெய்தியதைக்கண்டு அஞ்சிய மக்களை வழக்கம் போல முதலிலேயே மதவாதிகள் தடுத்தாட் கொண்டு விட்டனர். அவர்களது பூஜைகளும், பலிகளும் பலனளிக்காமல் போகவே 1950ல் இம்மக்கள் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேற ஆரம்பித்தனர். அப்போது தான் அரசும் மருத்துவர்களும் கூட உறக்கத்திலின்று எழுந்தனர். அன்று முதல் இம்மக்களின் துயர் துடைக்க அரசு எடுத்த முயற்சிகள் அப்பப்பா! அவை தான் எத்தனை எத்தனை?



1) விஷ நீர்க் கிணறுகளின் அருகே எச்சரிக்கை போர்டுகளை நிறுத்தியது. போர்டுகள் நல்ல தண்ணீர் கொடுத்து தம் தாகத்தைக் தணிக்கவில்லையாதலால் மக்கள் அவற்றைப் பிய்த்து எறிந்து அரசின் மீதுள்ள தம் கோபத்தைத் தணித்துக் கொண்டனர். 2) 30 வருடங்களுக்குப் பிறகு நெதர்லாந்து அரசாங்கம் இரக்கத்துடன் போட்ட 115 மில்லியன் ரூபாய் பிச்சையில் ஒரு குடிநீர்த் திட்டம் ஆரம்பித்தது. நாலே ஆண்டுகளில் குடிநீர் தருவதாக உறுதி மொழி தந்தது. ஆனால் 10 கிராமங்களுக்குக் கூட தண்ணீர் வசதி கிடைக்கவில்லை. பணத்தை ஏப்பம் விட்டதற்காக என்ஜினியர் ஒருவரை வேலை நீக்கம் செய்ததோடு சரி. 3) N.T. ராமராவ் இந்த கிராமங்களுகளுத் தண்ணீர் தருவதாக தேர்தல் வாக்குறுதி தந்து பதவிக்கு வந்தார். கிருஷ்ணா ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள நாகார்ஜுன சாகர் அணை இந்தக் கிராமங்களின் அருகில் தான் உள்ளது. சில கிலோ

www.thamizham.net - Free E Books No TM 14701

மீட்டர்கள் தூரமே கால்வாய் வெட்டி இக்கிராமங்களுக்குத் தண்ணீர் கொண்டு வர அதிக செலவாகும் என்று பதவிக்கு வந்தபின் கைவிரித்து விட்டது ராமராவ் அரசு. (இந்த அரசை நம்பி தோண்டப்படும் தெலுங்கு கங்கை கால்வாய் தமிழ் நாட்டு குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கப் போகிறதாம்! வேடிக்கை தான்!) 4) அடுத்து ராமராவ் அரசு சுகாதார அதிகாரிகளை அனுப்பி மக்கள் இந்த ப்ளுரைடு நீரை குடிக்க வேண்டாமென்று அறிவுறுத்தச் சொன்னது. நீரில் போட்டு குடிப்பதற்கு மருந்துகளை விநியோகிக்கச் செய்தது. ஆனால் வியர்த்து களைத்து வேலையிலிருந்து திரும்பும் தமது அவசரத்தை உணராமல் நிதானமாக மணிக்கணக்கில் நீரில் திளைத்து மெதுவாகக் கரைந்து கொண்டிருந்த இந்த மாத்திரைகளால் தமக்குப் பயனில்லை என்று மக்கள் அவற்றைப் புறக்கணித்து விட்டனர். இடையே நலகொண்டா மாவட்டத்திலிருந்து 100 கி. மீ. தொலைவிலுள்ள ஹைதராபாத்திலிருந்து தமக்கு மட்டும் குடிநீரை வரவழைத்துக் கொள்ளும் மாவட்ட கலெக்டர் மற்றும் அரசு அதிகாரிகள் இந்த அப்பாவி மக்களின் வயிற்றெரிச்சலைக் கூடத்தமதாக்கிக் கொண்டனர். 5) அதிகாரிகளும், மருத்துவர்களும் பயந்து போய் உண்மையான மக்கள் சேவை செய்ய இக்கிராமங்களை விட்டு வேறு இடங்களுக்குப் போய் விட்டனர். 6) கடைசியாக அரசு அனுப்பிய பல்வேறு ஆராய்ச்சிக் குழுக்கள் இப்பகுதிகளில் உள்ள மண், பாறை, இங்கு பாயும் கங்கல் நதி நீர், அரிசி தவிர நிலத்தில் விளையும் பிற தானியங்கள் அனைத்திலும் ப்ளுரைடின் அளவு மிக அதிகமாக உள்ளது; 20% கிராமங்களில் உள்ள நீர் செழுமையான காளை மாடுகளைக் கூட முடமாக்கி கொன்றே விடக் கூடிய நச்சுத்தன்மை கொண்டது, வாழ்வு மலரும்பருவமான 10—20 வயதிற்குள்தான் ப்ளுரோஸிஸ் என்ற இந்த நோய் மக்களை பாதிக்கிறது என்றெல்லாம் கண்டு பிடித்தனர்.



பிரச்சனைக்குத் தீர்வு மட்டும் தான் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

—விலா

www.thamizham.net - Free E Books No TM 14701

## அறா எம்.எல்.ஏ.!

ரேஷனில் கிடைக்கும் பொருட்களை அதிகம் பெறும் பொருட்டு மத்தியதரக் குடும்பத்தினர் தங்களது வருவாயைக் குறைத்துச் சொல்வது எங்கும் நடை பெற்றுக் கொண்டு தான் இருக்கிறது. ஆனால் இதையே ஒரு எம். எல். ஏ செய்வது எவ்வளவு கேவலமானது! எம். எல். ஏ என்ற முறையில் வாங்கும் மாத சம்பளம் ரூ 1000 தவிர வேறு வழிகளில் உபரி வருமானமும், 35 தறிகளுக்கு சொந்தக் காரராகவும் விளங்கும் திரு. ஸ்ரீரங்கநாயகலு என்ற தெலுங்கு தேச எம். எல். ஏ தனது குடும்பத்தின் ஆண்டு வருமானமே ரூ 4800 தான் என்று எழுதியுள்ளார். இதன்படி ஆண்டு வருமானம் ரூ 5000க்குள் இருப்பவர்களுக்கு மட்டுமே இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்ற சலுகையின் அடிப்படையில் இவரும் மாதா மாதம் 25 கிலோ அரிசி பெற்று வருகிறார்.

### வனவளத்துறை மொழி வளர்க்கிறது!

பிலிப்பைன்ஸ் நாட்டு வனவளத்துறை தனது 5000 ஊழியர்களுக்கும் ஒரு நூதன போட்டி வைத்துள்ளது. திருமணமாகாத இளம் பெண்களைக் "கன்னி" என்று அடை மொழியிட்டு அழைப்பதைப் போல இன்னும் ஆராயப் படாத, வெட்டப் படாத, கைபடாத மரத்திற்கு ஆபாச மற்ற ஒரு புதிய வார்த்தையைக் கண்டு பிடிப்பதற்காகவே இப் போட்டி நடத்தப் படுகிறது. பரிசாக 40 டாலர்களும் சான்றிதழும் வழங்க முன் வந்துள்ளது.

### பரிசு தரும் பள்ளங்கள்

சாலைப் பராமரிப்பு குறித்து மங்களூர் கார்ப்பரேஷனின் அசட்டையான போக்கிற்கு எதிர்ப்புத் தெரிவிக்க மங்களூர் நுகர்வோர் கல்வி அறக்கட்டளை ஒரு நூதன வழியைக் கையாண்டுள்ளது. அதன்படி மங்களூர் சாலைகளிலுள்ள மிகப் பெரிய பள்ளங்களைக் கண்டுபிடிப்போருக்கு பரிசு தருவதாக அறிவிக்கப் பட்டது. முதல் பரிசான ரூ 51ஐ வாங்கித் தந்த பள்ளத்தின் நீளம் 10மீ; அகலம் 5மீ; ஆழம் 20செ.மீ கொள்ளளவு 5000 லிட்டர். இரண்டாம் பரிசான ரூ 25ஐப் பெற்றுத் தந்த குழியின் நீளம் 6மீ; அகலம் 2.5மீ; ஆழம் 10செ.மீ

www.thamizham.net - Free E Books No TM 14701

# ஆபாசத்திற்கு

"உடல் வனப்பைக் காட்டி ஆபாசப் பாடல்களுக்குக் கிளர்ச்சியூட்டும் விதத்தில் ஆடல் என்ற பெயரில் அசை வாட்டம் போடும் சிலுக்கு சுமிதா மலேசியா வருகிறார் என்ற விளம்பரங்களைத் தமிழ் நாளிதழ்களில் காணும் போது மன வேதனைப் படும் ரசிகர்களில் நாங்களும் அடங்குவோம்.



சிலுக்கு சிலிர்ப்பினால் நிகழ்ச்சியின் மூலம் பணம் அதிகம் வசூலாகும் என்பதும் அதற்காகப் பணத்தை வாரிக் கொட்டி மலேசிய மேடைகளில் அவரைக் குலுங்க வைப்பதும் கலை வளர்ச்சிக்கு உதவாது. ரசிகர்களின் மன வளர்ச்சிக்கும் உகந்ததல்ல. இதனை ஏற்பாட்டாளர் உணர வேண்டும்."

—தெ. ஆ. மனோகரன், பெலாம் தோட்டம், பப. முத்து, கேலாஸ் லாமா அ. அப்பள கொண்டா, தாமான் ஜொகூர் கூலிம்.

இப்படி ஒரு 'வாசகர் கடிதம்' பிரபல மலேசிய தமிழ் நாளிதழ் ஒன்றில் வெளியாகியுள்ளது.

இந்த ரசிகர்கள் தமிழ் நடிகையர், திரைப்படத் துறையினரை மட்டுமல்ல, கலையை வளர்ப்பதாகக் கூறிக் கொண்டு ஆபாச நடிகைகளின் படங்களையும், ஆட்டத்தையும் ஸ்பெஷலாக வெளிச்சம் போட்டுக் காட்டும் பிரபல மசாலாப் பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சித் துறையினர், விளம்பர தாரர்கள், ரசிகர் மன்ற நடத்துனர்களை எழுத்தால் காறி உமிழ்ந்து எட்டி உதைத்திருக்கிறார்கள். மக்கள் விரும்புகிறார்கள் என்று பழியை ரசிகர்கள் மீது போட்டு ஆபாசத்தைக் காட்டி காசு சேர்க்கும் படத்தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்களின் முகத்திரைகளைக் கிழித்தெறிந்துள்ள இந்த ரசிகர்களை நாமும் பின்பற்ற வேண்டியது அவசியம்.

—விசா

www.thamizham.net - Free E Books No TM 14701



# சுலபமாக ஆங்கிலம் பேசுவதற்கு

## பாலாஜிஸ் ஈஸி வே டு ஸ்பீக் இங்கிலீஷ்

பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கும், படித்த பின்பும் ஆங்கில இலக்கணக் குழப்பமுள்ளவர்களுக்கும், இலக்கணப் பிழைகள் இல்லாமல் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும், எழுதவும், கற்பிக்கவும் உதவும் ஒரே நூல்! வியாபாரிகள், தொழில் அதிபர்கள், ஆங்கிலத்தில் அதிகத் தேர்ச்சி இல்லாத மற்றவர்கள், தமிழ் மூலமாகவே இலக்கண விதிப்படி ஆங்கிலத்தைக் கற்க இதுவே ஒரு சிறந்த வெளியீடு. மேலும் இந்நூலைப் படிக்க ஆரம்பித்தவுடன் ஆசிரியர் ஒருவர் உங்களுடன் இருப்பதுபோல் உணர்வீர்கள்.

**உங்கள் ஊரில் உள்ள எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.... விலை ரூ.17.75**

விவரங்களுக்கு:
பாலாஜி பப்ளிகேஷன்ஸ்
103, பைகிராப்ட்ஸ் ரோடு
சென்னை-600 014.


www.thamizham.net - Free E Books No TM 14701

# வாழ்க்கை என்பது வியாபாரம்?

சில சமூகச் சீர்த்திருத்தங்களை எல்லோருமே கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளத் தயங்க மாட்டோம்; ஆனால் நடைமுறைப் படுத்தத் தேவைப்படும் மனப்பக்குவமோ, உறுதிப்பாடோ நமக்குள் வளர்த்துக் கொள்வதில்லை.

வரதட்சணை ஒழிப்பு இதுக்கு ஓர் எடுத்துக்காட்டு :

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று முடிவாகி விட்ட பிறகு வரதட்சணை என்பதே ஒரு 'குற்றம்' என்று சொல்வதில் நியாயம் இல்லை. அது நிர்ப்பந்தமாகி மனித உறவுகளைத் தகர்ப்பது தான் அநாகரிகம்: அக்கிரமம்.

இக்கொடுமையைக் களைவதற்காக அடிப்படையில் சில மனப்போக்குகளை நாம் திருத்தியாக வேண்டும்.

"காசே தான் கடவுளடா" என்கிற மத வெறி தளராத வரை... "நெஞ்சிலுள்ள காதல் பெரிது, காசு பெரிதில்லை" என்கிற விரதம் ஏற்படாதவரை...

"தாய் சொல் கேள்; தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்னும் முதுமொழியை நமது இளைஞர்கள் தங்கள் திருமண விஷயத்திலிருந்து நிராகரிக்கத் துணியாத வரை...

"கார் வச்சு அழைக்கணும்; கச்சேரி வைக்கணும்; ஊர் பேசும் பேச்சாயிருக்கணும்" என்கிற ரீதியில் திருமண வைபவம் தான் ஒரு குடும்ப அந்தஸ்தை வெளி உலகுக்குக் காண்பிக்கும் ஒரு சாதனம் என்பதான பாமரத்தனம் மங்காத வரை...

வரதட்சணை கொடுப்பதும் வாங்குவதும், சட்டங்களால் தடை செய்யப் பட்டாலும் நமது சமுதாய வாழ்வின் சாபக் கேடாகவே நீடிக்கும்.

—எழிலமுதன்

[illegible]தான் இழந்த அரசைப் பெறுவதற்காக தன்னுடைய இரத்தத்தையே 'மை'யாக்கி புத்த மத வேதப் புத்தகத்தை அப்படியே எழுதினார், கயோகு என்ற ஜப்பானிய மன்னர்!

135 பக்கங்கள்-10,500 வார்த்தைகள் எழுதிய இந்த மன்னரின் முயற்சி வீண் போகவில்லை!

மீண்டும் ஆட்சியை கைப் பற்றி பல்லாண்டுகள் ஆட்சி புரிந்திருக்கிறார் இவர்.

www.thamizham.net - Free E Books No TM 14701

## திரையுலகப் பிரமுகர்கள்: நடிகர் எம். ஜி. ஆர் 6

நடிகர் எம். ஆர். ராதா, எம். ஜி. ஆரைச் சுட்டது 1967 தேர்தல் நேரத்தில் தி.மு.க வுக்கு மிகவும் வசதியாக அமைந்தது. எம். ஜி. ஆர் கட்டுப் போட்டுக் கொண்டு தி.மு.க வுக்கு ஓட்டுப் போடச் சொல்லும் புகைப்படச் சுவரொட்டி தி.மு.க தேர்தல் பிரச்சாரத்திற்கு புது ஆயுதமானது.

எம். ஜி. ஆர் படுத்துக் கொண்டே 26,000 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றது மட்டுமன்றி, முதல் முறையாக தி.மு.கவும் 19 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியை முறியடித்து அரியணை ஏறியது. என்றுமில்லாத அளவுக்கு எம். ஜி. ஆருக்கு கட்சியில் செல்வாக்கு உயர்ந்தது.

தி.மு.க அரசின் முதல் அமைச்சரவை பட்டியலை, அண்ணாதுரை மருத்துவமனையில் இருக்கும் எம். ஜி. ஆரின் சம்மதப் பார்வைக்கு அனுப்பி வைத்தார். அமைச்சர் பட்டியலில் இடம் பெற்ற ஆதித்தனார் பெயரை வெட்டச் சொன்ன எம். ஜி. ஆரின் விருப்பம், மறுப்பின்றி நிறைவேற்றப் பட்டது.



கட்சிக்காக கடுமையான தியாகம் செய்த எத்தனையோ நபர்களை விட எம். ஜி. ஆருக்கு— அவர் ஏற்படுத்திக் கொடுத்த சினிமா மாயை ஒன்றிற்காகவே அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. "எம். ஜி. ஆர் பெயரைச சொன்னால் 10,000 ஓட்டுகள், முகத்தைக் காட்டினால் 30,000 ஓட்டுகள் கிடைக்கு"மென அண்ணாவே குறிப்பிட்டு எம். ஜி. ஆரைத் தலையில் தூக்கி வைத்து கொண்டாடினார்.

இந்நிகழ்வுக்கு சுமார் 7 ஆண்டுகள் முன்பு இதே அண்ணாதுரை இதே எம். ஜி. ஆரைப் பற்றி குறிப்பிட்ட வாக்கு மூலத்தை தனது 'உள்ளும் புறமும்' என்னும் நூலின்

www.thamizham.net - Free E Books No TM 14701

*முதற் பதிப்பு 11 ஆம் பக்கத்தில் கண்ணதாசன் இப்படி எழுதுகிறார் :*

திருவொற்றியூர் காவலர் கூட்டத்தில் சமரசம் ஏற்பட்ட பிறகு
அறிஞர் அண்ணா அவர்கள் என் விட்டிற்கு வந்திருந்தார்கள்.
அவரிடம் நான், "கட்சியில் நாங்கள் எல்லாம் கஷ்டப்பட்டு
பணத்தை இழந்து வேலை செய்கிறோம். அழுக்குப் படாமல் வந்து
போய் அலங்கார பொம்மையாக காட்சியளிக்கும் நடிகர்கள் உற்சவ
மூர்த்திகளாக ஆகிவிடுகிறார்கள். தொண்டர்கள் எங்களை ஏறி மிதித்து
கொண்டு அவர்களைத் தொட்டுப் பார்க்கப் போகிறார்கள். இதை
எப்படி அண்ணா தாங்கிக் கொள்வது" என்று கேட்டேன். அவர்
சொன்னார் :

':இந்தா கண்ணதாசன் எம். ஜி. ஆரைக் கட்சிக்கு இழுத்தது
கருணாநிதி. அவரை மக்கள் திலகம், புரட்சி வீரர் என்றெல்லாம்
பட்டம் போட்டு அழைத்தது நீங்கள் தான். இப்போது கட்சியில்
அவருக்கிருக்கிற செல்வாக்கெல்லாம் உங்களாலே வந்த வினைதான்.
இனி நான் எதைக் காரணம் காடடி எம். ஜி. ஆர் கட்சிக்கு வேண்டாம்
என்று சொல்ல முடியும்? ஏதாவது வழியிருந்தால் சொல்லு"

*எம். ஜி. ஆர் 1953இல் தி.மு.க வில் சேர்ந்ததிலிருந்து கழகம் நடத்திய போராட்டங்களில் முக்கியமானவை : பிரதமர் நேருவை எதிர்த்து ரயில் நிறுத்தப் போராட்டம், டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக பெயர் மாற்றக் கோரி போராட்டம், ராஜாஜியின் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்துப் போராட்டம், இந்த மூன்று போராட்டங்களை மும்முனைப் போராட்டம் என்று கழக வரலாறு சிறப்பிக்கிறது. இதில் எந்தப் போராட்டத்திலும் எம். ஜி. ஆர் தன்னைச் சம்மந்தப்பட்டுக் கொள்ளவேயில்லை.*

*தி.மு.க.வின் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான தொண்டர்களும், கிட்டத்தட்ட எல்லா தலைவர்களும் கலந்து கொண்டு சிறை புகுந்தனர். இந்தப் போராட்டத்திலேனும் எம். ஜி. ஆர் தன்னைக் கழகத்திற்காக சிரமப்படுத்திக் கொண்டாரா? ஒரு நாளாவது சிறைவாசம் அனுபவித்தாரா?*

*கழகத் தொண்டர்கள் இந்தி எதிர்ப்புப் போரில் தீக்குளித்த அந்த உணர்ச்சி கரமான சூழலில் எம். ஜி. ஆர் கோவா கடற்கரையில், நடிகை ஜெயலலிதாவுடன் "ஆயிரத்தில் ஒருவன்" படத்திற்கான "உண்டால் மயக்கும் கள்ளாவது அது உண்ணாத நெஞ்சிற்கு முள்ளாவது'*

www.thamizham.net - Free E Books No TM 14701

என்ற சல்லாபப் பாடலின் சுகமான படப்பிடிப்பில் மெய் மறந்திருந்தார்.

இவை பற்றியெல்லாம் கருத்தில் கொள்ளாது எம். ஜி. ஆர் தனது சினிமா போதையால் மயக்கிச் சேர்த்தப் பெருங்கூட்டம், கழகத்திற்கு ஓட்டுப் போடுகிறது என்பதற்காகவே கழகம் தியாக மறவர்களை ஒதுக்கி விட்டு எம். ஜி. ஆரை முன்னணிக்கு உயர்த்தியது.

1963இல் எம். ஜி. ஆர் எம். எல். சி பதவியைக்கழகத்தோடு ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகத் தூக்கி எறிந்த போது, அப்போது வெளியான "என் கடமை" படத்தை அவர் ரசிகர்களே புறக்கணித்தார்கள். கழகம் எம். ஜி. ஆரைவிட அப்போது செல்வாக்கு பெற்றிருந்தது. அதற்கு பிறகு அடுத்த 4 ஆண்டுகளில் தனது படங்களை, தன் தனி நபர் துதிப் போக்கில் அமைத்துக்கொண்டதன் விளைவாக, அவர் எதிர்பார்த்த மாறுதல்—கழகத்தை விட எம். ஜி. ஆர் செல்வாக்கு உயரும் கட்டம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை எம். ஜி. ஆர் உணர்ந்து கொண்டார்.

'நாட்டைப் பிடிக்கப் போறேன்' என்று எம். ஜி. ஆர் முன்பு சினிமாவில் பாடிய ஆசைக் கனவை விரைவாக்கும் வண்ணம் தனது திரைப்படங்களை, ரசிகர் மன்றத்தை, அரசியல் பின்னணியை முடுக்கி விட்டார்.

அண்ணாதுரைக்கு மக்களிடத்தில் உள்ள மாபெரும் செல்வாக்கையும் தன் சினிமா கவர்ச்சியோடு சேர்த்துக் கொண்டால் வெற்றி விரைவில் என்று தீர்மானித்துச் செயல் பட்டார்.

முதற்கட்டமாக 1968இல் தன் சொந்த செலவில் சென்னையில் மிக முக்கியமான பகுதியான அண்ணா சாலையில் அண்ணா சிலையை அமைக்கச் செய்தார், தொடர்ந்து அண்ணாவின் பெயரும், புகழும் எம். ஜி. ஆர் படப் பாடல்களில் இடம் பெற்றன. அண்ணாவின் வாரிசாக தன்னை மக்கள் நம்பும் படியாக அவரது திரைப்படங்களில் பாடல்கள், வசன வரிகள் இடம் பெற்றன.

"நான் உங்கள் வீட்டுப்பிள்ளை இது ஊர் அறிந்த உண்மை! நான் செல்லுகின்ற பாதை பேரறிஞர் காட்டும் பாதை"—புதியபூமி (1968)

1969இல் அண்ணாதுரை மறைந்த பின் முதல்வர் பதவிக்கு நெடுஞ்செழியனும் கருணாநிதியும் போட்டியிட்

www.thamizham.net - Free E Books No TM 14701

## எமக்கு வந்தவை

**மணிக்குரல் :** (உலகத் தமிழ் மாத இதழ்)
ஆசிரியர்: 'மன்னை' மாசிலாமணி, 25, உலகப்ப தெரு, 2வது மாடி, திருவல்லிக்கேணி, சென்னை-5. தனியிதழ்: 50 காசு

**தமிழ்ச்சிட்டு :** (தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்)
ஆசிரியர்: பெருஞ்சித்திரனார், தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தனியிதழ்: 50 காசு.

**தென்மொழி :** (திங்களிதழ்)
ஆசிரியர்: பெருஞ்சித்திரனார், தென்மொழி அச்சகம், சென்னை-600005. தனியிதழ் ரூ. 1.25.

**தத்துவங்கள் 100 :** ஆசிரியர் : கு. தங்கவேல்
V.P.L. குருசாமி பிள்ளை சன்ஸ், ஜவுளி நூல் வியாபாரம், 40, சின்னக்கடை வீதி, ஸ்ரீவில்லிபுத்தூர்-626125. விலை ரூ. 3.00

**China Pictorial, China's Screen, China Reconstructs, China Philately, China Sports, Women of China,**
(மக்கள் சீனத்திலிருந்து வெளிவரும், இந்திய அரசால் விற்பனைக்கு அனுமதிக்கப்பட்ட 6 ஆங்கில பத்திரிகைகள்) தமிழக விநியோகஸ்தர்கள்: ரத்னா புக் ஏஜென்சி, அஞ்சற் பெட்டி எண்: 149, 50, எல்டாம்ஸ் சாலை, சென்னை-600018.

[இப்பகுதியில் பதிவு பெற்ற பத்திரிகைகள், மட்டுமே இடம் பெறும். பதிவு பெறாமல் தனிச்சுற்று இதழாக எமக்கு அனுப்பப்பட்ட இதழ்கள் அனைத்திற்கும் நன்றி. ஆனால் பதிவின்றி பத்திரிகை நடத்துவதும் அதற்கு சந்தாபெறுவதும் சட்ட விரோதமானதாகும். அறியாமல் இவ்வாறு நடத்திவருபவர்கள் சட்டத்தெளிவு பெற வேண்டுகிறோம்]

டபோது எம்ஜி.ஆர் கருணாநிதிக்கு ஆதரவாக இருந்தார். கருணாநிதியே முதல்வரானார். இந்த ஆதரவுக்கு எம். ஜி. ஆர், கருணாநிதியிடம் கேட்ட பேரம் சுகாதாரத் துறை அமைச்சர் பதவி. ஆனால் எம். ஜி. ஆருக்கு தி மு.க பொருளாளர் பதவி அளிக்கப்பட்டது. அதாவது கழகத்தின் நிர்வாகத்தில் 3-வது இடம்; எனினும் எம். ஜி. ஆர் திருப்தியடையவில்லை. அடுத்து வந்த அடிமைப் பெண் படத்தில் அமைச்சரவையில் தான் இடம் பெறாத அதிருப்தியைப் பாடலாக வெளிப்படுத்தினார்.

"ஏமாற்றாதே! ஏமாற்றாதே! ஏமாறாதே ஏமாறாதே!"

—(தொடரும்)

www.thamizham.net - Free E Books No TM 14701

# எந்த ஐயத்திற்கும் பதில்

- சட்டம் * மருத்துவம்
- மனோதத்துவம் * அரசியல்
- பொருளாதாரம் * சமூகவியல்

போன்ற எந்தத் துறையில் எழும் உங்கள் சந்தேகங்களுக்கும் சரியான, தெளிவான பதில் தெரியாமல் இனி குழம்ப வேண்டாம்!

கேள்விகளை "எந்த ஐயத்திற்கும் பதில்" என்று உறைமேல் எழுதி அனுப்பி வையுங்கள்.

பதில்கள் அந்தந்தத் துறை சார்ந்த நிபுணர்களிடமிருந்து பெற்று உங்களுக்கு அஞ்சலில் விளக்கமாக எழுதி அனுப்பப்படும்.

பதில் பெற கட்டணம் கேள்வி ஒன்றுக்கு ரூ. 2-00 பணவிடையாக அல்லது அஞ்சல் தலையா ... சுட்டி ... முகவரிக்கு அனுப்ப வேண் ...

ம

1494, அண்ணா நகர்

சென்னை-600 040.


www.thamizham.net - Free E Books No TM 14701

வரி விளம்பரங்கள் :

'முகம்' முற்போக்கு மாத இதழ் படித்தீர்களா? விலை 50 காசு. ஆண்டு கட்டணம் ரூ 6/- விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, எண் : 18, 68வது தெரு, 11வது செக்டர் கருணாநிதி நகர், சென்னை-600078.

☐ கல்கண்டில் வெளிவந்த அன்புதாசனின் மருத்துவக் கட்டுரைகள் 50 படித்தால் டாக்டரிடம் சிகிச்சைக்காகப் போகும் வேலையே இருக்காது. ரூ.7-25. Dr.ராமமூர்த்தியின் சித்தமருத்துவம் ரூ. 12-00 ஹோமியோபதி ரூ. 9-25. இரண்டு நூலிலும் நோயும், நோய் தீர்க்கும் முறையும் கூறப் பட்டுள்ளது. புத்தக விலையை M. O. செய்யவும். இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம்-611001.

☐ இயேசு வரமாட்டார் (4.80); டி. ஜீ. எஸ், தினகரன் ஒருபகல் கொள்ளைக்காரர் (1.00), தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் (1.00), அஞ்சல் செலவு இலவசம். பாலன சகோதரர்கள், புழல், சென்னை-600066.


☐ சுட்டியை சென்னையில் ஒவ்வொரு மாதமும் பணம் கட்டி வாங்கலாம். வீட்டிலே வந்து போடுகிறோம். குறைந்தது 10 பேர்களாவது வாங்கும் பகுதியாக இருக்கவேண்டும். எழுதுக: திருமதி. எம். மைதிலி, 27-பி, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், சென்னை-600 053.

# ரங்கா டைப் பௌண்ட்ரி

- ☐ போஸ்டர் அச்செழுத்துக்கள்.
- ☐ எல்லா வித, எல்லா மொழி ஈய எழுத்துக்கள்.
- ☐ அச்சக உபகரணங்கள்.
- ☐ புது அச்சகம் தொடங்க நாணயமான வழிகாட்டுபவர்கள்

அலுவலகம் : 73, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-112.
தொழிலகம் : 38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை சென்னை-7.
தொலை பேசி : 37999, 664293.


www.thamizham.net - Free E Books No TM 14701




www.thamizham.net - Free E Books No TM 14701

- சுட்டி ஒவ்வொரு மாதமும் 1 தேதி வெளிவரும்
- 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ. 5-00
- தனிப்பிரதி 50 காசு.
- எல்லாத் தொடர்புகளுக்கும்:—

ஆசிரியர் குழு, 'சுட்டி'
1494, அண்ணா நகர், சென்னை-600 040.

**சுட்டி விற்பனையாளர்கள் :**

சுட்டி விற்பனையாகாத எல்லா நகரங்களிலும், ஊர்களிலும், கிராமங்களிலும் தேவை. எளிய விதிமுறைகள், தரமான கமிஷன். சுட்டியின் கொள்கைகளில் ஆர்வம் கொண்ட வாசகர்களுக்கு முன்னுரிமை உண்டு.

**சுட்டியில் மலிவு—வரி விளம்பரம் :**

சுட்டியில் 3 வரிகளுக்குள் (சுமார் 15 வார்த்தைகள்) அடங்குமாறு உங்கள் செய்தியை வெளியிடுவதற்குக் கட்டணம் ரூ. 15/- மேற்கொண்டு வரியொன்றிற்கு ரூ. 5/- மட்டுமே.

**சுட்டியை இலவசமாக அறிமுகப் படுத்துங்கள் :**

'சுட்டி'யை இன்னும் படிக்காத நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா? அவர்களுக்குச் சுட்டியை அறிமுகப்படுத்த விரும்புகிறீர்களா? சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவரா?

அப்படியானால் அவர்கள் முகவரியை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் செலவில் இலவசமாக ஒரு மாதிரி இதழ் அவர்களுக்கு அனுப்புகிறோம். அஞ்சலட்டையின் மேல் மாதிரி இதழ் என்று குறிப்பிடவும்.


ஒருவர் எவ்வளவு நண்பர்களின் முகவரி வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

**சுட்டி முன் இதழ்கள் வேண்டுமா?**

இதழ் எண்கள் 1 முதல் 8, 10, 19, 21, 22, 26 தவிர பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும். பெற விரும்புவோர் இதழுக்கு 35/- காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O) அனுப்பினால், எங்கள் செலவில் அனுப்புவோம்.

www.thamizham.net - Free E Books No TM 14701

[illegible] இதழ் 1, ஜன. 1984 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-56



# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

**SAKTHI SUGARS** has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

**SAKTHI SUGARS** has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

**SAKTHI SUGARS** has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailash Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.

www.thamizham.net - Free E Books No TM 14701